மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

மாவட்ட உரிமையியல் நீதி பதி . மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள்15 ஆம் நாள்

**E.P.36/2021**

**in**

**O.S.167/2010**

ரம்ஜான்பீவி ......நிறைவேற்று மனுதாரர்/ வாதி/தீர்ப்பாணைபெற்றவர

**// எதிர்//**

1. அப்துல் சலாம்
2. கமருன்னிசா
3. அகமது நாச்சியா
4. ஹஸ்மா
5. ஹரிதா
6. தவ்லத்
7. ஜீனைதா
8. ஷாகுல் ஹமீது ....... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் /தீர்ப்புக்கடனாளிகள்

இம்மனு 01.07.2021 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 21.04.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. V. ரவிச்சந்திரன்** அவர்களும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S.உதயகுமார்** அவர்கள் முன்னிலையாகியும்,

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று(28.04.2023) வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது சமூகம் நீதிமன்றத்தாரவர்கள் தயவு செய்து எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சமூகம் நீதிமன்ற டிகிரிபடி மனுதாரர்களுக்கு கிரய சாசனம் செய்து கொடுக்க உத்தரவு வழங்கியும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் ஆஜராக தவறும் பட்சத்தில் மனுதாரர் சமர்ப்பிக்கும் முத்திரை தாளில் எதிர்மனுதாரர்களுக்காக சமூகம் கோர்ட்டாரவர்களே பதவி வழி முறைமையில் பதிவு செய்யப்பட்ட கிரய சாசனத்தை எதிர்மனுதாரர்களுக்காக, மனுதாரருக்கு செய்து கொடுக்க வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் உ.ந.ச. கட்டளை 21 விதி 34-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்** :-

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி O.S.167/2010-ல் கடந்த 16.09.2014 ம் தேதியன்று ஏற்பட்ட தீர்ப்பாணை உத்தரவின்படி எதிர்மனுதாரர் நடக்க தவறியதாகவும், எனவே, அவரிடமிருந்து மனுக்கட்டிடத்தை வசப்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்** :-

எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 2014-ம் ஆண்டு அசல் வழக்கில் ஏற்பட்ட டிகிரிக்கு 2021 ல் நிறைவேற்று மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மனு சொத்தை 8 ம் பிரதிவாதி கிரயம் பெற்று அனுபவித்து வரும் நிலையிலும் மேற்படி நிறைவேற்று மனுவை 3 வருட காலத்திற்குள் தாக்கல் செய்யாததால் இம்மனு நிலைநிற்கதக்கதல்ல என்றும், பிரதான வழக்கில் பெற்ற டிகிரிக்கு பிறகு மேற்படி பலரும் இறந்துவிட்டதால் இறந்த நபர்களுக்கு

எதிராக இம்மனுவின் நிறைவேற்ற இயலாது என்றும் எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**4. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

ஒரு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டால் அதிகபட்சமாக 6 மாத காலக்கட்டத்திற்குள் மேற்படி நிறைவேற்று மனுவில் தீர்வுக்காணப்படவேண்டும் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இம்மனுவை பரிசீலிக்கையில் இம்மனுவானது காலவரையரை சட்டம் உருபு 135-ன் வரையரைக்குள் வருகிறதா அல்லது உருபு 136-ன் வரையரைக்குள் வருகிறதா என்ற பிரதான வாதம் இருதரப்பிலும் முன் நிறுத்தப்பட்டது. அதற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் அந்தோனிசாமி எதிர் அருளானந்தம் பிள்ளை மற்றும் பலர் என்ற வழக்கின் சாராம்சத்தையும் 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கிருஷ்ணராஜ் எதிர் வசந்தகோபால் மற்றும் பலர் மற்றும் முகிந்தர்பால்சன் எதிர் ஸ்ரீமதி,கோமதி மனைவி போன்ற வழக்குகளில் சொல்லப்பட்ட சாராம்சத்தின் தொகுப்புகளை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

முதலாவதாக காலவரையரை சட்டம் 1963 உருபு 135 ஆனது செயலுறுத்துக் கட்டளைப்பரிகாரத்தை நிறைவேற்றுவதற்காக ஒரு மனு தாக்கல் செய்யப்படுமாயின் அந்த

மனுவானது தீர்ப்பாணை தேதியோ, அல்லது அந்த தீர்ப்பாணையில் ஏதேனும் தேதி குறிப்பிட்டிருந்தால் அந்த தேதியிலிருந்து மேற்படி காலவரையரையானது துவங்கும் என்றும், அது 3 ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் என்றும், சட்டம் தெளிவுப்படுத்துகிறது.

உருபு 136 ஆனது நிரந்தர உறுத்துக்கட்டளை அல்லாத எந்த ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் உத்தரவோ அல்லது எந்த ஒரு தீர்ப்பாணையையோ எப்பொழுது செயல்பாட்டுக்கு வருகிறதோ அல்லது அந்த தீர்ப்பாணையிலோ அல்லது அதனை தொடர்ந்து பணம் செலுத்த எதுவும் உத்தரவாகியிருந்தாலோ ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் ஏதேனும் ஒரு சொத்தை வசப்படுத்தி கொடுக்க சொல்லியிருந்தாலோ அல்லது அடுத்தடுத்த காலக்கட்டங்களில் பணத்தை செலுத்த தவறியிருந்தாலோ என்ன நோக்கத்திற்காக அந்த ஒப்படைவு சொல்லப்பட்டதோ அந்த தேதியிலிருந்து 12 ஆண்டுகளுக்குள் மேற்படி மனுவினை தாக்கல் செய்யவேண்டும் என்றும் வரம்புரையாக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்திற்கு மேற்படி காலவரையறை கிடையாது என்றும் சட்டம் வரையறுத்துள்ளதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

மனுதாரர் தரப்பில் கொடுத்த முன் தீர்ப்பானது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தின் படி கொடுக்கப்படும் ஒரு தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு 12 ஆண்டுகள் காலவரையரை உள்ளது என்பதை தெளிவுப்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

8 வது எதிர்மனுதாரர் கொடுத்த முன் தீர்ப்புகள் இந்த மனுவின் சாராம்சத்துடன் பொருந்தி வரவில்லை என்பதையும் மேற்படி எதிர்மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

நிறைவேற்று மனுவின் ஆதரவாக கொடுக்கப்பட்ட பிரதான அசல் வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் ...

1. **that the suit is decreed and the relief of the specific performance of**

**contract of sale is granted in favour of plaintiff.**

2. **that the defendants are directed to execute the sale deed in favour of plaintiff in respect of suit properties within two months from the date of judgment(16.09.2014)**
3. **In default of defendants, the plaintiff can execute the decree through court.**
4. **that the defendants do pay the sum of Rs.9,919/- towards the cost of the suit to the plaintiff.**

என்று உத்தரவு பகரப்பட்டுள்ள நிலையில் மேற்படி உத்தரவினை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் செயலுறுத்துக்கட்டளை எதுவும் மேற்படி தீர்ப்பாணையில் கொடுக்கப்படாத நிலையில் மேற்படி தீர்ப்பாணையின் 2 வது மற்றும் 3 வது மற்றும் 4 வது உத்தரவுகளைபொறுத்து அது முதல் உத்தரவின் தொடர்ச்சியே என்பதும், மேற்படி உத்தரவுகள் செயலுறுத்துக்கட்டளை என்ற வரையரைக்குள் வராது என்பதையும் எனவே, இம்மனுவின் பரிகாரத்தைப்பொறுத்து காலவரையரை சட்டம் 1963 உருபு 136 மட்டுமே பொருந்தி வரும் என்பதையும் எதிர்மனுதாரர் எடுத்த கட்சியான உருபு 135 வரும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் மனுதாரருக்கு 12 ஆண்டுகாலம் மேற்படி தீர்ப்பாணை தேதி அல்லது தீர்ப்பாணை செயலாக்கத்திற்கு வந்த தேதி ஆகிய இரண்டில் எது குறிப்பிடப்பட்டுள்ளதோ அதிலிருந்து துவங்குகிறது என்பதால் இம்மனுவானது உரிய கால வரையரைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி தீர்ப்பாணையில் இரண்டாவதாக உள்ள உத்தரவைப்பொறுத்து அதை செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரமாக பாவித்து கட்சி எடுக்கப்பட்டுள்ளதை பொருத்து மேற்படி செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரமாக இருந்தால் காலவரையரை சட்டம் 1963 உருபு 135-ல் சொல்லப்பட்டுள்ள 3 ஆண்டுகாலம் பொருந்திவரும் என்பதையும் ஆனால் இம்மனுவின் தீர்ப்புரையில் அவ்வாறு

வெளிப்படையாக எதுவும் இல்லாத நிலையில் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான புரித்தவகை பரிகார சட்டத்தின் கீழான நிவாரண பரிகாரத்தைப்பொறுத்து உருபு 136 மட்டுமே பொருந்தும் என்றும் இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

**முடிவில்**, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 28.04.2023) அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)

-